**பிரதான விடயங்களடங்கிய ஆவணம் (KFD)**
**துரித கால தவணைக் கடன்**
**மேர்சன்ட் பேங்க் ஒ.்.ப் ஸ்ரீ லங்கா அன்ட் பினான்ஸ் பீஎல்சீ**

(Merchant Bank of Sri Lanka & Finance PLC)

## 1 .பொருள் / சேவை – துரித கால தவணைக் கடன் (Speed Term Loan)

இந்த வசதியானது வர்த்தகத் துறையினருக்கு தமது குறுதிய கால நிதித் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பொருட்டு பிரதானமாக வழங்கப்படுகின்றது. கடன் வழங்கும் காலப்பகுதியில் (tenor period) வாடிக்கையாளர் மாதாந்தம் வட்டியை செலுத்த வேண்டியதுடன், அடிப்படைக் கடன் தொகையையும் (Capital) அக்காலப்பகுதிக்குள் செலுத்தலாம். எவ்வாறாயினும் பெற்றுக்கொண்ட மொத்தக் கடன் தொகையையும் 2 வருட காலப்பகுதிக்குள் முழுமையாகச் செலுத்துதல் வேண்டும்.

## 2. பிரதான அம்சங்கள் மற்றும் நன்மைகள்

- அ. கவர்ச்சிகரமான வட்டி வீதம்
- ஆ. ஆகக்குறைந்த கடன் வழங்கும் காலப்பகுதி
- இ. ஆகக்கூடியது 2 வருடங்கள் வரை மீளச் செலுத்தும் காலப்பகுதி.
- ஈ. விரைவான வாடிக்கையாளர் சேவை.

## 3. தகைமை: விண்ணப்பதாரர் பின்வரும் தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்:

- 18 வயதிற்கு மேற்பட்ட மற்றும் 65 வயதிற்குக் குறைந்த இலங்கைப் பிரஜையாக இருத்தல்.
- சிறிய அல்லது நடுத்தரளவிலான வர்த்தகராக இருத்தல் அல்லது ஒரு தொழிலில் இருத்தல்.
- ஏற்றுக் கொள்ளக்கூடிய / உறுதிப்படுத்தக்கூடிய மீளச் செலுத்தும் இயலுமை.
- தெளிவான / திருப்திகரமான கொடுகடன் அறிக்கை (திருப்திகரமான CRIB அறிக்கை).
- வசதியைப் பெற்றுக்கொள்ளும் நோக்கமானது சட்டரீதியானதும் நெறிமுறைக்குட்பட்டதாகவும் இருத்தல்.
-

## 4. வட்டி வீதம் மற்றும் ஏனைய கட்டணங்கள்

### 4.1 வட்டி வீதம்

வட்டி வீதம், சொத்துக்களது தரம், வாடிக்கையாளர் அச்சம் தொடர்பான பகுப்பாய்வு மற்றும் சந்தை நிலைமைகளை அடிப்படையாகக் கொண்டு காலத்திற்குக் காலம் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் குழுவினால் (ALCO) எடுக்கப்படுகின்ற தீர்மானங்களின் அடிப்படையில் வட்டி வீதம் தீர்மானிக்கப்படுகின்றது.

வருடாந்த வட்டி வீதம் 18.00% ஆகும்.

## 4.2 ஏனைய கட்டணங்கள்

### 4.2.1 ஆவணப்படுத்தும் கட்டணம்

| | |
|---|---|
| இல.ரூ. மில்லியன் 1.0 வரை | இல.ரூ. 10,000 |
| இல.ரூ. மில்லியன் 1.0 - இல.ரூ. மில்லியன் 5.0 | இல.ரூ. 20,000 |
| இல.ரூ. மில்லியன் 5.01 - இல.ரூ. மில்லியன் 12.50 | இல.ரூ. 30,000 |
| இல.ரூ. மில்லியன் 12.51 - இல.ரூ.மில்லியன் 15.00 | ஆகக்குறைந்தது இல.ரூ.40,000<br>ஆகக்கூடியது இல.ரூ.50,000 |
| இல.ரூ. மில்லியன் 15.01இற்குக் கூடிய | ஆகக்குறைந்தது இல.ரூ.50,000 |
| முதிர்வுத் திகதிக்கு முன்னர் கடன்களைத் தீர்ப்பதற்கான கட்டணம் | ஆகக்குறைந்தது 2,500 |

### 4.2.2. சட்டக் கட்டணங்கள் - அசையாச் செத்துக்களுக்கு (Immovable Properties) வழங்கப்படும் வசதிகள்

பாதுகாப்பிற்காக சமர்ப்பிக்கப்படுகின்ற அசையாச் சொத்துக்களது உரிமையை உறுதிசெய்யும்பொருட்டு, உரிமை அறிக்கைகளைத் தயாரிக்கும்பொருட்டு வழக்கறிஞர்களுக்கு கொடுப்பனவு செய்யப்படவேண்டிய கட்டணங்கள் மற்றும் நிதி அடகு உரிமைப்பத்திரத்தினைத் (Mortgage Bonds) தயாரித்தல் மற்றும் நடைமுறைப்படுத்தும்பொருட்டு MBSL மற்றும் வழக்கறிஞர்களினால் அறவிடப்படுகின்ற கட்டணங்கள் காட்டப்பட்டுள்ளன.

- உரிமையை உறுதிப்படுத்துதல் மற்றும் உரிமை அறிக்கையைத் தயாரித்தலுக்கு - ரூ.7500/-
- அடகு உறுதியைத் தயாரித்தல் மற்றும் நடைமுறைப்படுத்துவதற்கான சட்டக்கட்டணம் - வசதித் தொகையின் 1% (ஆகக் குறைந்தது ரூ.10,000.00 / ஆகக் கூடியது ரூ.1,000,000.00)

### 4.2.3. கட்டணங்கள் - அசையும் சொத்துக்களுக்கு (Moveble Properties) வழங்கப்படும் வசதிகள்

ஆரசாங்கத்தினால் அனுமதிக்கப்பட்ட RMV/DMT வாகனப் பதிவு கட்டணங்கள் உரித்தாகும்.

### 4.2.4. மாதாந்த தவணைக்கட்டணத்தை உரிய திகதியில் செலுத்தாமை / தாமதமாதல் தொடர்பான தண்ட வட்டி (இருந்தால்)

மாதாந்தத் தவணைப் பணத்தை உரிய திகதியில் செலுத்தாமை அல்லது தாமதமடைந்திருந்தால், தாமதமாகிய காலப்பகுதிக்கு மாதத்திற்கு 3% மேலதிக வட்டியொன்று (overdue interest) அறவிடப்படும்.

### 4.2.5. எதிர்கால கொடுப்பனவுகள்

எதிர்காலக் கொடுப்பனவின்போது, எதிர்கால வட்டி தொடர்பான சலுகை வழங்கும் செயற்பாடு MBSL இனால் தீர்மானிக்கப்படும்.

### 4.2.6. ஏனைய கட்டணங்கள்

| இல. | அறவீடு/கட்டணம் பற்றிய விபரம் | அறவீடுகள்/கட்டணங்கள் (ரூபா) |
|---|---|---|
| 1 | கணக்கு மீதியை உறுதிப்படுத்தல் | 1,000.00 |
| 2. | உறுதி மற்றும் சுவட்டு வரைபடத்தின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகள் | 750.00 |
| 3. | நிலுவைத் தொகை இல்லாமையை உறுதிப்படுத்தும் கடிதம் | 250.00 |
| 4 | வாடிக்கையாளர் கடன் செலுத்துதல் வரலாறு | 250.00 |
| 5 | அனைத்து வாகன வகைகளுக்குமான (Duplicate Deletion) கடன்கள் இரத்துச்செய்யப்பட்மைக்கான கடிதங்களின் பிரதிகள் | 2000.00 |
| 6 | கடன் மீதியை உறுதிப்படுத்தும் கடிதங்கள் | 1000.00 |
| 7 | தீர்ப்பனவுக் கடிதங்கள் | 750.00 |
| 8 | கடன் வழங்குபவர்கள் / வாங்குபவர்களுக்கு வழங்கும் விலைப்பட்டியல் | 1,500.00 |
| 9 | காசோலை திரும்பல் கட்டணங்கள் | 2,500.00 |
| 10 | காசோலை திரும்பல்கள் – காசோலை வரைந்தவரால் மேற்கொள்ளப்பட்ட பண நிறுத்தல்கள் | 5,000.00 |
| 11 | (காணாமல்போன) விடுவிக்கும் உறுதயை தயாரித்தல் மற்றும்கயொப்பமிடுதலுக்கான (நடைமறைப்படுத்தல்) சட்டரீதியான கட்டணங்கள் | 7500.00 |

## 5.பெற்றுக்கொள்ள வேண்டிய பிணை மற்றும் வழங்கப்படவேண்டிய காப்புகள்

- **பணம் மற்றும் / அல்லது கோரிக்கைகள் / தவணை வைப்பு**

  முதிர்வின்போது வட்டி செலுத்தப்படுகின்ற வைப்பாக இருக்கும்பட்சத்தில், வைப்புத் தொகையில் 100% வரை.

- **அசையாச் சொத்துக்கள்**

  வங்கியில் மதிப்பீட்டாளர் குழுவிலுள்ள ஒரு மதிப்பீட்டாளரால் வழங்கப்படுகின்ற, சொத்தினை ஏலமிடுகையில் கிடைக்கக்கூடிய விற்பனைப் பெறுமதியின் (Forced Sale Value) 75% வரை.

- **அசையும் சொத்துக்கள்**

  வங்கியில் மதிப்பீட்டாளர் குழுவிலுள்ள ஒரு மதிப்பீட்டாளரால் வழங்கப்படுகின்ற, சொத்தினை ஏலமிடுகையில் கிடைக்கக்கூடிய விற்பனைப் பெறுமதியின் (Forced Sale Value) 60% வரை.

- **பங்குச் சந்தையின் பட்டியலிடப்பட்ட பங்குகள்**

  சந்தைப் பெறுமதியின் 200% வரை

- **பழுதடையாத பொருள் இருப்பு**

  சந்தைப் பெறுமதியின் 200% வரை

## 6. பின்பற்ற வேண்டிய நடைமுறை

- சாத்தியமான அனைத்து வாடிக்கையாளர்களும் அருகிலுள்ள கிளைக்கு அழைக்கப்பட்டு அவர்களின் தேவைகளைப் பற்றி கலந்துரையாடுதல்.
- கலந்துரையாடலுக்குப் பிறகு, கிளையானது வாடிக்கையாளரின் தேவையைப் பொறுத்து மீளாய்வு செய்து செயல்முறையைத் தொடங்கும்.
- அங்கீகரிக்கப்பட்ட DOA இன் படி ஒப்புதல் பெறப்படும்

## 7. தேவையான ஆவணங்கள்

### 7.1 தனிப்பட்ட வாடிக்கையாளர்கள்

i. முறையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவம் / சொத்துகள் பிரகடனப் படிவம்

ii. தேசிய அடையாள அட்டையின் பிரதி (NIC)

iii. பற்றுச்சீட்டு ஆதாரம்/வதிவிட உறுதிச்சான்றிதழ் (06 மாத காலப்பகுதிக்குள்பெற்ற )

iv. இறுதி 03 மாதங்களில்பெற்ற சம்பளப் பட்டியல் மற்றும் தொழிலை உறுதிப்படுத்தும் கடிதம் தொழில் செய்தால் மட்டும்)

v. கடந்த 6 மாத வங்கிக் கூற்றுக்கள் (தனிப்பட்ட மற்றும் வணிக)

vi. MTA பரிமாற்றப் படிவம்

vii. காசுப் பாய்ச்சல் கூற்றுக்கள்/ வருமான செலவுக் கூற்றுக்கள்

viii. CRIB அறிக்கை (தனிப்பட்ட மற்றும் வணிக)

ix. வியாபாரப் பதிவுச் சான்றிதழ் பிரதி (கிடைத்தால்)

x. பிற வருமான ஆதார ஆவணங்கள்

### 7.2 பெருநிறுவன வாடிக்கையாளர்கள்

**வரையறுக்கப்பட்ட நிறுவனங்கள் / மேற்கோள் காட்டப்பட்ட நிறுவனங்கள்**

i. கூட்டிணைத்தல் சான்றிதழ்

ii. அமைப்பு அகவிதிகள்

iii. 1 ஆம் படிவம் , சமீபத்திய 13ஆம் படிவம், 15 ஆம் படிவம், 20 ஆம் படிவம் ஆகியவற்றின் பிரதிகள் மற்றும் வரிசெலுத்தல் பற்றுச்சீட்டு / வருமான வரி (புதிய) பிரதிகள்.

iv. சபைத் தீர்மானங்கள்

v. கடந்த மூன்று வருட கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகள்

vi. நடப்பு ஆண்டு முகாமைத்துவக் கணக்குகள்/காசுப் பாய்ச்சல் கூற்றுகள்

vii. கடந்த 6 மாத வங்கி அறிக்கை

viii. CRIB அறிக்கை (வணிக / பணிப்பாளர்கள்)

**8. பிணையத்துடன் தொடர்புடைய ஆவணங்கள்**

**8.1 சொத்து அடகு**

- **தற்போதைய உரிமையாளரின் உறுதியின் மூலப் பரதி**
- 10 வருடங்களுக்குள் வரையப்பட்ட மூல அவையியல் வரைபடம் (10 அடிக்கு மேற்பட்ட பிரவேசப் பாதை உள்ள)
- உள்ளூராட்சி நிறுவனங்களின் ஆவணங்கள் மற்றும் பற்றுச்சீட்டு
- 30 வருட உறுதிகளின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதி
- உரிமை தொடர்பான அறிக்கை
- சபை மதிப்பீட்டாளரிடமிருந்து பெற்ற மதிப்பீட்டு அறிக்கை
- இணக்கச் சான்றிதழ் (COC) – இருந்தால் மட்டும்
- தேவையெனின் விருப்பம் தெரிவிக்கும் கடிதம் (காணி அபிவிருத்திக் கட்ளைச் சட்டம் / காணி துண்டாடும் சபை / காணி நிரவல் மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனம், கரையோரம்பேணல் திணைக்களம் என்பன)
- அனுமதிக்கும் அதிகாரங்கள் / முகமைத்துவத்தினால் கோரப்படுகின்ற பிற ஏதேனும் ஆவணங்கள்.

**நிருமாணம் எனின்**

- அனுமதிக்கப்பட்ட கட்டிட திட்ட வரைபடம்
- அளவு விபர சிட்டை (BOQ) /செலவு மதிப்பீடு (பொருத்தமெனின்)

**8.2. அசையும் சொத்துக்களுக்கான பிணை**

- ஆரம்ப பதிவுச் சான்றதழ்
- வாகனத்தின் முழுமையான உரிமை
- மதிப்பீட்டு அறிக்கை

## 9.பொதுவான தேவைப்பாடுகள்

- வணிக அமைவிடத்தின் புகைப்படங்கள் (பெயர் பலகையுடன்) மற்றும் பணையின் புகைப்படம்
- ஆய்வு அறிக்கை
- கடன் தேவைக்கான ஆதாரம் / உறுதிப்படுத்தும் ஆவணம்
- தேவையான பிற ஏதேனும் ஆவணங்கள்.

## 10. முக்கிய விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்

**a.** இந்தக் கடன் வசதி, Merchant Bank of Sri Lanka & Finance PLC (MBSL) நிறுவனத்தின் கோரிக்கையின்பேரில் எந்த நேரத்திலும் உடனடியாக முழுமையாக திருப்பிச் செலுத்தப்பட வேண்டியதாகும்.

**b.** கடனாளியின் தற்போதைய வேலைவாய்ப்பு / வருமானம் / வணிக நிலைமைகளில் ஏதேனும் மாற்றம் ஏற்பட்டால், அது உடனடியாக MBSLக்கு அறிவிக்கப்பட வேண்டும்.

**c.** MBSL நிறுவனத்தின் பிரதிநிதிகளுக்கு, கடனாளியின் வணிக இடம்,தொழில்செய்யும் இடம் அல்லது வசிப்பிடத்திற்கு சென்று, வணிக நடவடிக்கைகள், கணக்குப் பதிவுகள் மற்றும் ஆவணங்களை பரிசோதிக்கவும் அல்லது MBSLக்கு செலுத்த வேண்டிய தொகைகளை மீட்டெடுக்கத் தேவையான ஆய்வுகள் மற்றும் பார்வைகளை மேற்கொள்ளும் உரிமை உண்டு. இவ்வாறான நடவடிக்கைகளுக்கான அனைத்து செலவுகளும் கடனாளியால் ஏற்கப்பட வேண்டும்.

**d.** கடனாளியின் பெயரில் MBSLஇல் உள்ள வைப்பு, முதலீடு அல்லது பிற கணக்குகளில் உள்ள நிதிகளை, இக்கடன் வசதியின் கீழ் செலுத்தப்பட வேண்டிய தொகைகளை முழுமையாக அல்லது பகுதியளவில் ஈடு செய்ய, கழித்துக் கொள்ள, பயன்படுத்த அல்லது கட்டணமாக அறவிட MBSLக்கு உரிமை உண்டு. மேலும், கடனாளியிடம் MBSL-க்கு நிலுவையில் உள்ள (உறுதியான அல்லது நிபந்தனைக்குட்பட்ட) கடன் பொறுப்புகளைத் தீர்க்கவும் அந்நிதிகளை பயன்படுத்தவோ அல்லது தற்காலிகமாக தக்கவைக்கவோ MBSLக்கு உரிமை உண்டு. இவ்வகை **set-off** உரிமை பயன்படுத்தப்படும் போது, அதற்கான முழு விவரங்களும் உடனடியாக கடனாளிக்கு அறிவிக்கப்பட வேண்டும்.

**e.** MBSL-இன் முன்கூட்டிய எழுத்து அனுமதியின்றி, கடனாளி அடமானமாக வழங்கப்பட்ட வாகனம் / சொத்தின்மீது உரிமை, பயன்பாட்டு உரிமை, குத்தகை, வாடகை அல்லது வேறு எந்த உரிமையையும் மாற்றவோ வழங்கவோ கூடாது.

**f.** அடமானமாக வழங்கப்பட்ட வாகனம் / சொத்தின்மீது, கடனாளி வேறு அடமானம் (Mortgage), தடை உரிமை (Lien) அல்லது வேறு சுமை (Encumbrance) உருவாக்கவோ உருவாக்க அனுமதிக்கவோ கூடாது.

**g.** இந்த Short Term Loan வசதியின் கீழ் செலுத்த வேண்டிய அனைத்து தொகைகளும் இலங்கை, கொழும்பு 03, இல. 28, St. Michael’s Road, BOC Merchant Tower இல் அமைந்துள்ள

Merchant Bank of Sri Lanka & Finance PLC-இன் பதிவு செய்யப்பட்ட முகவரிக்கு செலுத்தப்பட வேண்டும். எனினும், MBSL-இன் விருப்பத்தின்படி, அதன் பிற கிளைகள் அல்லது ஏனைய முறைகள் மூலம் செய்யப்பட்ட கட்டணங்களையும் ஏற்று உரிய வகையில் கணக்கிடலாம்.

**h.** கடனாளி தவறுதல் (Default) செய்தால், MBSL தனது வசூல் உரிமையை நடைமுறைப்படுத்தும் போது, முன்பு வேறு இடங்களில் செலுத்தப்பட்டிருந்தாலும், அனைத்து கட்டணங்களும் MBSLஇன் பதிவு செய்யப்பட்ட முகவரியான இல. 28, St. Michael's Road, Colombo 03-க்கு செலுத்தப்பட வேண்டும்.

**i.** அடமானம் வாகனமாக இருந்தால், MBSL ஏற்றுக்கொள்ளும் காப்புறுதி நிறுவனத்திடமிருந்து முழுமையான (Comprehensive) காப்புறுதி பெறப்பட வேண்டும்; அது MBSLக்கு ஒப்படைக்கப்பட்டிருக்க வேண்டும். ஆண்டுதோறும் புதுப்பிக்கப்பட வேண்டும். புதுப்பிக்கப்படாவிட்டால் MBSL அதனை புதுப்பித்து செலவை கடன் கணக்கில் பதிவேற்றும்.

**j.** அடமானம் வாகனமாக இருந்தால், அதன் இறுதி உரிமையாளர் MBSL ஆக பதிவு செய்யப்படலாம். கடனாளிக்கு பயன்பாட்டு உரிமை இருந்தாலும், MBSL கோரும்போது வாகனத்தை ஒப்படைக்க வேண்டும். தேவையான காலத்திலும் இடத்திலும் வாகனத்தை கைப்பற்றி, தனது விருப்பத்தின்படி விற்பனை செய்ய MBSLக்கு உரிமை உண்டு.

**k.** அடமானம் நிலச் சொத்தாக இருந்தால், அதில் உள்ள கட்டிடங்களுக்கு காப்புறுதி மதிப்பிற்கு இணையான தீ காப்புறுதி (Fire Insurance Policy) MBSL அங்கீகரிக்கும் காப்புறுதி நிறுவனத்திடமிருந்து பெறப்பட்டு MBSLக்கு ஒப்படைக்கப்பட வேண்டும். ஆண்டுதோறும் புதுப்பிக்கப்பட வேண்டும்; இல்லையெனில் MBSL புதுப்பித்து செலவை கடன் கணக்கில் சேர்க்கும்.

**l.** அடமானம் நிலச் சொத்தாக இருந்தால், பிரதான விண்ணப்பதாரர் / விண்ணப்பதாரர்கள் கடன் மதிப்பிற்கு ஏற்ப குறைந்து செல்லும் வாழ்க்கை காப்புறுதி (Reducing Term Life Insurance Policy) பெற்று அதனை MBSLக்கு ஒப்படைக்க வேண்டும்.

**11. முடிவுறுத்தல் மற்றும் மீட்டெடுப்பு – சட்ட நடைமுறை**

இந்த நிபந்தனைகளின் அடிப்படையில் MBSL இந்த வசதியை நிறுத்தும் பட்சத்தில், விண்ணப்பதாரர் / விண்ணப்பதாரர்கள் மற்றும் / அல்லது உத்தரவாததாரர் / உத்தரவாததாரர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கவும், நிலுவைத் தொகை, முத்திரைக் கட்டணம், சட்டச் செலவுகள் உள்ளிட்ட அனைத்து செலவுகளையும் மீட்டெடுக்கவும், வழங்கப்பட்ட அடமானத்தை கைப்பற்றவும் / விற்பனை செய்யவும் (Foreclose) MBSLக்கு உரிமை உண்டு.

**11.1 தொடர்புடைய சட்ட ஏற்பாடுகள்**

a) 1946 ஆம் ஆண்டின் இல. 06 அடமான ஆணைச் சட்டம்
b) 1982 ஆம் ஆண்டின் இல. 29 நுகர்வோர் கடன் சட்டம்
c) ஒப்பந்தச் சட்டம்

d) இலங்கை சிவில் மற்றும் குற்றவியல் சட்டம்
e) 2009 ஆம் ஆண்டின் இல. 49 பாதுகாப்பு பரிவர்த்தனைச் சட்டம்
f) 1998 ஆம் ஆண்டின் இல. 21 உரிமைப் பதிவு சட்டம்
g) 1995 ஆம் ஆண்டின் இல. 11 நடுவர் சட்டம்
h) 1988 ஆம் ஆண்டின் இல. 72 சமரச சபைச் சட்டம்
i) 1990 ஆம் ஆண்டின் இல. 02 கடன் மீட்பு (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டம்
j) 1990 ஆம் ஆண்டின் இல. 14 Inland Trust Receipts Act
k) 2011 ஆம் ஆண்டின் இல. 42 நிதி வணிகச் சட்டம்
l) 2017 ஆம் ஆண்டின் இல. 24 உள்நாட்டு வருமானச் சட்டம்
m) 2007 ஆம் ஆண்டின் இல. 07 நிறுவனச் சட்டம்
n) 1927 ஆம் ஆண்டின் இல. 23 ஆவணப் பதிவு ஆணைச் சட்டம்
o) 1840 ஆம் ஆண்டின் இல. 07 மோசடி தடுப்பு ஆணைச் சட்டம்
p) 1902 ஆம் ஆண்டின் இல. 04 அதிகாரப்பத்திர ஆணைச் சட்டம்
q) 1982 ஆம் ஆண்டின் இல. 43 முத்திரை வரிச் சட்டம்
r) 1958 ஆம் ஆண்டின் இல. 02 தேயிலை மற்றும் ரப்பர் தோட்டப் பிரிப்பு கட்டுப்பாட்டு சட்டம் மற்றும் 2005 ஆம் ஆண்டின் இல. 20 திருத்தச் சட்டம்
s) 1973 ஆம் ஆண்டின் இல. 11 குடியிருப்பு அலகு உரிமைச் சட்டம்
t) 2025 ஆம் ஆண்டின் இல. 20 தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் சட்டம்
u) 1979 ஆம் ஆண்டின் இல. 58 தொழிலாளர் சேவைச் சட்டம்

**12. முறைப்பாடுகளைக் கையாளும் நடைமுறை**

வாடிக்கையாளர்கள் எமது கடன் வசதி அல்லது சேவைகள் தொடர்பான முறைப்பாடுகளை பின்வரும் வழிகளில் சமர்ப்பிக்கலாம்:

- அருகிலுள்ள கிளைக்கு சென்று கிளை மேலாளரிடம் முறைப்பாடு சமர்ப்பித்தல்.
- வாடிக்கையாளர் சேவை இலக்கம் **011-4711711** ஐ தொடர்புகொண்டு அல்லது **info@mbslbank.com / customercare@mbslbank.com** மின்னஞ்சல் மூலம் அறிவித்தல்.
- அஞ்சல் மூலம் கீழ்கண்ட முகவரிக்கு எழுத்து மூலமாக அனுப்புதல்:

**முறைப்பாடுகளைக் கையாளும் அதிகாரி (பதில்கடமை),**
மேர்சன்ட்பேங்க் ஆஃப் ஸ்ரீ லங்கா அண்ட் ஃபைனான்ஸ் PLC,

இல. 28, இலங்கை வங்கி மேர்சன்ட் கோபுரம்
புனித மைக்கல் வீதி
கொழும்பு 03.